15.07.2026.

Crl.M.P.No. 1001/2026

PW1 – திரு. வின்செண்ட், த/பெ. திரு. கேசவன்.

<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>

1. கடந்த 28.10.2015 அன்று கந்து வட்டி தொழில் செய்யும் அனில்குமார் என்பவரிடமிருந்து நான் ரூ.1,25,000/– வாங்கியிருந்தேன். அதற்கு செக்கியூரிட்டியாக எனக்குரிய ரீ சர்வே எண். 4/2 ல் உள்ள எனது வீட்டின் முன்பகுதியில் உள்ள ஒரு செண்ட் இடத்தை செக்கியூரிக்டியாக அனில்குமாரிடம் கிரய ஒப்பந்தம் பதிவு செய்து கொடுத்தேன். எனது ஒரிஜினல் ஆவணத்தையும் அனில்குமாரிடம் கொடுத்தேன். எனக்குரிய அருமனை மெர்கண்டைல் வங்கியின் மூன்று காசோலைகள் 007102, 007103, 007104 ஆகியவற்றையும் எனது மனைவி பத்மாவதி பெயரில் உள்ள புத்தன்சந்தை IOB வங்கியின் இரண்டு காசோலைகள் 277011 மற்றும் 277012 ஆகியவற்றையும் இரண்டு வெள்ளை பேப்பரில் ஸ்டாம் ஒட்டப்பட்ட பிராமிசரி நோட்டையும் அனில்குமாரிடம் கொடுத்திருந்தேன். நான் வாங்கிய 1,25,000/– ற்கு அனில்குமாரிடம் 2 லட்சத்திற்கு மேல் வட்டியாக கொடுத்துவிட்டேன். நான் அனில்குமாரிடம் அசல் தொகை ரூ.1,25,000/– கொடுக்க பலமுறை முயற்சித்து அவரை அனுகினேன். அனில்குமார் அதனை வாங்காமல் என்னை பலமுறை அலைக்களித்தார். இதற்கிடையில் அனில்குமார் 007104 எண்ணிட்ட காசோலையை வைத்து STC.No. 175/2016 என ஒரு வழக்கை ரூ. 4,00,000/– த்திற்கு இந்த நீதிமன்றிதில் தாக்கல் செய்தார். அந்த வழக்கானது கடந்த 2023 அன்று நான் விடுதலை செய்யப்பட்டு தீர்ப்பானது.

2. நான் அனில்குமாரிடம் நேரடியாகவும் போன்மூலமாகவும் எனது ஆவணங்களை பலமுறை கேட்டேன். அதற்கு அனில்குமார் என்மீது பொய்யான வழக்கு போடாமல் விடமாட்டேன் என்று மிரட்டி வந்தார். நான் கடந்த 05.08.2024 அன்று மார்த்தாண்டம் காவல் ஆய்வாளருக்கு ஆன்லைன் மூலம் எனது ஆவணங்களை அனில்குமாரிடமிருந்து வாங்கித் தர புகார் கொடுத்தேன். ஆனால் அந்த காவல் ஆய்வாளர் எனது மனுவை விசாரிக்கவும் இல்லை. எனது சி.எஸ்.ஆர் எதுவும் வழங்கவில்லை. நான் காவல் கண்காணிப்பாளர், DGP வரை மனுக்கள் அனுப்பினேன். எந்த நடவடிக்கையும் எனது புகாரின் பேரில்

எடுக்கவில்லை. நான் இலவச சட்ட உதவி மையத்தில் மனு கொடுத்தேன். அதன் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் ஆஜராகவில்லை. நான் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு புகார் அனுப்பியதன் பேரில் காவல் ஆய்வாளர் எனக்கு அழைப்பாணை அனுப்பி ஆஜராக சொன்னார். அதன்படி நான் விசாரணைக்குச் சென்றேன். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார். அந்த விசாரணை நகலையும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். காவல் ஆய்வாளர் என்னை மட்டும் விசாரித்தார். அனில்குமாரை விசாரிக்கவில்லை. நான் மாண்பமை மதுரை உயர்நீதிமன்றத்தில் Crlop. MP. No. 11470/2025 என வழக்கு தாக்கல் செய்ததில் காவல் ஆய்வாளர் ஆஜராகி சிவில் பணப் பிரச்சனை என சொல்லி எனது புகாரை முடித்துவிட்டதாக சொல்லி உள்ளார். அவ்வாறு முடித்தாக சொல்வதற்கு எனக்கு Closer Report கொடுக்க அந்த வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

3. நான் உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் காவல் ஆய்வாளருக்கு கடந்த 29.07.2025 அன்று Closer Report கேட்டு கடிதம் அனுப்பினேன். காவல் ஆய்வாளர் எனக்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை. நான் 06.02.2026 அன்று எனது வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரருக்கு அனுப்பினேன். தற்போது வரை எதிர்மனுதாரர் எனக்கு எந்த பதிலும் அனுப்பவில்லை. எனது வழக்கை கோப்பிற்கு எடுத்து விசாரிக்க பிரார்த்திக்கிறேன்.